| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| சா.சேதுராமவர்மா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்<br>மற்றும் இணை இயக்குநர்(கல்வி), பாண்டிச்சேரி. |

**ந.க.எண். 019373 / எப்1 /2022** **நாள். 02.02.2022**

ஐயா / அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 – 2021–2022–ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் – பள்ளி மாணாக்கரின் பெயர்பட்டியலை பதிவேற்றம் செய்வதற்கும், தேர்வு கட்டணம் மற்றும் TML கட்டணம் செலுத்துவதற்கும் கூடுதலாக கால அவகாசம் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் இதே எண்ணிட்ட செயல்முறைகள், நாள்:03.01.2022 மற்றும் 19.01.2022.
2. இவ்வலுவலகக் கடிதம் ந.க.எண்.027018/எச்1/2021, நாள்.04.01.2022 மற்றும் 19.01.2022.

------

பார்வையில் காணும் கடிதங்களின் தொடர்ச்சியாக, பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பள்ளி மாணாக்கரின் பெயர்பட்டியலை பதிவேற்றம் செய்வதற்கும், தேர்வு கட்டணம் மற்றும் TML கட்டணம் **(பத்தாம் வகுப்பு, மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு) செலுத்துவதற்கு மேலும் கூடுதலாக 03.02.2022 முதல் 05.02.2022 வரையிலான நாட்களில் கால அவகாசம் வழங்கப்படுகிறது.** இதுவே, பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பணிக்காக வழங்கப்படும் கடைசி வாய்ப்பாகும். இதன்பின்னர், இப்பணிக்காக எக்காரணம் கொண்டும் கூடுதல் கால அவகாசம் வழங்கப்படமாட்டாது.

எனவே, அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும், தங்களது ஆளுகைக்குட்பட்ட உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் அனைவரும், பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பணியினை **05.02.2022** –க்குள் நிறைவு செய்வதற்கும், தேர்வுக் கட்டணம் (பத்தாம் வகுப்பு, மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு) செலுத்தவும் உரிய அறிவுரைகளை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/–
**இயக்குநர்**

**நகல்:**

1. அனைத்து மாவட்டஅரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்

– தகவலுக்காகக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும்